**உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்**

# தேவனுடைய வழிநடத்துதல்



Compiled by
P. Isaac Chandran

கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும், உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்.

உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும், நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்.
சங்கீதம் 25:4,5

நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.

அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை, கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்.
சங்கீதம் 37:23,24

சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்.
சங்கீதம் 25:9

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.
சங்கீதம் 119:105

உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.
எரேமியா 29:13

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.
மத்தேயு 6:33

மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.
ரோமர் 8:14

உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,

உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்: அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.
நீதிமொழிகள் 3:5,6

ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள்;: அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்.
நீதிமொழிகள் 11:14

செம்மையானவர்களுடைய உத்தமம் அவர்களை நடத்தும்: துரோகிகளின் மாறுபாடோ அவர்களைப பாழாக்கும்.
நீதிமொழிகள் 11:3

உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி, அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்.
நீதிமொழிகள் 16:3

மனுஷருடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும்: அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர்.
நீதிமொழிகள் 16:9

பேதையானவன் எந்த வார்த்தையையும் நம்புவான்: விவேகியோ தன் நடையின்மேல் கவனமாயிருக்கிறான்.
நீதிமொழிகள் 14:15

விவேகத்துடன் காரியத்தை நடப்பிக்கிறவன் நன்மைபெறுவான்: கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்.
நீதிமொழிகள் 16:20

மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்: ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்.
நீதிமொழிகள் 19:21

கர்த்தராலே மனுஷருடைய நடைகள் வாய்க்கும்:
நீதிமொழிகள் 20:24

ஆம்! அனுதினமும் அதிகாலையில் கர்த்தருடைய சமூகத்தில் வந்து அவர் நமக்கு வைத்திருக்கும் வழிகளை அறிந்து கொண்டு அவர் ஆலோசனைகளின் படி நடக்கும்போது அந்த நாள் நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும்.

**********************